# மெட்ரோ ரயில்: வடசென்னையின் வரப்பிரசாதம்

வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் இடையே மெட்ரோ ரயில் நீட்டிப்பு, வட சென்னை வாசிகளுக்கு வரப்பிரசாதம் என, பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

## தொழில் வளர்ச்சி பெருகும்!

மெட்ரோ ரயில் திட்டத்தை, திருவொற்றியூர், விம்கோ வரை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை, பலகட்ட போராட்டத்திற்குப் பின் நிறைவேறியது, மகிழ்ச்சி.
வடசென்னை போன்ற போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதியில், மெட்ரோ ரயில் வரப்பிரசாதம்.



நேர்த்தியான பயணம், குறிப்பிட்ட நேரத்தில் செல்வது, மிகுந்த பயனாக உள்ளது. இதனால், தொழில் வளர்ச்சி பெருகும்.

**சுப்ரமணி,**
வடசென்னை மக்கள் உரிமை கூட்டமைப்பு, திருவொற்றியூர்.

## புதிய அனுபவம்

முதன்முறையாக மெட்ரோ ரயிலில் பயணம் செய்கிறேன். வேலைகளுக்கு செல்லும் வடசென்னை வாசிகள், கோயம்பேடு, எழும்பூர், மீனம்பாக்கம் சந்திப்புகளுக்கு, விரைவில் செல்ல முடியும். போக்குவரத்து நெரிசல் குறையும். இலவச பயணம், எங்களைப் போன்றவர்களுக்கு, ஒரு நல்ல வாய்ப்பு.



**மதுரை**, நர்சர், மகாராணி.

## பாதுகாப்பான பயணம்

சாதாரண ரயில் பயணத்தை காட்டிலும், மெட்ரோவில் பாதுகாப்பாக உணர்கிறேன். என்னைப் போன்றே, பல குழந்தைகள், தந்தையுடன் முதன்முதலில் மெட்ரோ ரயிலில், மகிச்சியுடன் பயணிக்கின்றனர். சுற்றுலாப் போல உள்ளது.



**ஷியாம்,**
நான்காம் வகுப்பு மாணவர், திருவொற்றியூர்.

## சொகுசு பயணம்!

ரயில் சேவை நீட்டிப்பின் மூலம் போக்குவரத்து நெரிசலுக்கு வழி பிறக்கும். வட சென்னையிலிருந்து, விமான நிலையம் வரை, குறைந்த கட்டணத்தில், மிகக்குறுகிய நேரத்தில், எந்த தடையும் இன்றி, சொகுசாக பயணம் செய்ய, இதை விட ஏற்ற போக்குவரத்து வேறில்லை. மக்கள் அதிகம் பயன்படுத்தும் முக்கிய பகுதிகளில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கூடுதல் சிறப்பு.



**மகாலட்சுமி,**
குடும்பத்தலைவி, சிந்தாதிரிப்பேட்டை.

## வடசென்னை முகம் மாறியது

கன்டெய்னர் லாரி போக்குவரத்து நெரிசல், குறுகலான சாலைகள் என இருந்த, வடசென்னையின் முகம் மாறியுள்ளது. சென்னைக்கான வளர்ச்சி திட்டங்களில் வடசென்னை புறக்கணிக்கப்படுகிறது என்ற நிலை மாறி, பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவில், பல துறைகள் வளம்பெறும் வகையில், மெட்ரோ ரயில் வந்திருப்பது மகிழ்ச்சி.



**நிஷா**, இல்லத்தரசி, கொடுங்கையூர்

## ஏழைகளின் ஆபத்பாந்தவன்!

திருவொற்றியூரிலிருந்து, விமான நிலையத்திற்கு செல்ல நேரடி பஸ் வசதி இல்லை. கால் டாக்ஸி அல்லது ஆட்டோவில் சென்றால், ரூ.400 - 500 வரை செலவாகும். குறைந்தது, இரண்டு மணி நேரம் ஆகும். அதே சமயம், மெட்ரோ ரயிலில், ரூ.70 செலவில், 58 நிமிடங்களில், சொகுசாக சென்றடையலாம். இதை, ஏழைகளின் ஆபத்பாந்தவன் என்றே சொல்லலாம்.



**விமல்ராஜ்**, தனியார் நிறுவன ஊழியர், திருவொற்றியூர்.

## பாதுகாப்பான பயணம்!

பாதுகாப்பான பயணத்துக்கு, மெட்ரோ ரயில் ஏற்றது. முகக்கவசம் இல்லாமல், இதில் பயணிக்க முடியாது என்பதால், அச்சமின்றி பயணிக்கலாம். பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன. உடைமைகள் 'ஸ்கேன்' செய்யப்பட்ட பிறகே அனுமதிக்கப்படுகின்றன. நிலையங்களில், 'சானிடைசர்'கள் வைக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.



**ரேணுகா,**
தனியார் பள்ளி ஆசிரியை, தண்டையார்பேட்டை.

## எளிதானது பயணம்

மக்கள் நெருக்கம், போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதியில், எந்தவொரு இடையூறுமின்றி, மெட்ரோ ரயில் இயங்குவதால், போக்குவரத்து எளிதாகிவிட்டது. திருவொற்றியூரில் இருந்து, மத்திய, தென் சென்னையின் அனைத்து பகுதிகளுக்கும், ஒரு மணி நேரத்தில் சென்று வர முடியும் என்பதை, மெட்ரோ ரயில் பயணம் உணர்த்துகிறது. பயணத்தின் போது, அறிவிப்பு, கதவுகள் அடைக்கப்படும் முறை போன்றவை, பாதுகாப்பானதாக உள்ளது.



**சக்திவேல்,**
வழக்கறிஞர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர்.



## ராட்டின பயணம்

மெட்ரோ ரயிலில், முதல் முறை பெற்றோருடன் பயணிப்பது மகிழ்ச்சியாக உள்ளது. வடசென்னையின் அழகை ரசித்தபடி, உயரே பறந்து செல்வது, அருமை. புது வண்ணாரப்பேட்டை அருகே, மேம்பாலத்தில் இருந்து, பாதாளத்தில் ரயில் பயணிக்கும் போது, ராட்டினத்தில் செல்வது போல் உள்ளது.
இது ஒரு புதிய அனுபவம். கொரோனா ஊரடங்கால் வெளியே செல்லாமல் இருந்த என்னைப்போன்ற சிறுவர்கள் தற்போது, மெட்ரோவில் பயணித்தது மகிழ்ச்சி அளிக்கும்.

**விசாகா,**
மூன்றாம் வகுப்பு மாணவி, விம்கோ நகர்.

## வடசென்னை வளரும்!

வடசென்னையில் மெட்ரோ ரயில் சேவையை, வளர்ச்சிப் பாதைக்கான அடித்தளமாக பார்க்கிறேன். இதனால், தொழில் வளங்கள் பெருகும். அதன் மூலம், பலர் வேலை வாய்ப்பு பெறுவர். தென் மற்றும் மத்திய சென்னை போன்று, விரைவில் வடசென்னையும் வளர்ச்சியை எட்டும். குறித்த நேர பயணம் என்பது, மெட்ரோவில் மட்டுமே சாத்தியம்.

**யோகேஸ்வரன்,**
சமூக ஆர்வலர், திருவொற்றியூர்.